## நிதி மற்றும் நிர்வாகப் பிரிவு

நிர்வாகத் தேவைப்பாடுகளுடன் காலத்துக்கேற்ப இணங்கியொழுகுவதற்கும் தகவல் தொழிநுட்ப வளர்ச்சி உள்ளக முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் மேம்பாடு, நிர்வாக மற்றும் நிதியியல் முகாமைத்துவ முறைமையினை அபிவிருத்தி செய்வது நிதி மற்றும் நிர்வாக பிரிவின் பிரதான பொறுப்புக்களாகும். செஸ் வரி, வருடாந்த கட்டணம் மற்றும் பதிவுக் கட்டணங்களை உரிய காலத்திற்கு அறவீடு செய்வதும் அவற்றினை உரிய முறையில் முதலீடு செய்தல், முறையான வரவு செலவுக் கட்டுப்பாடு உரிய நேரத்திற்கு நிதி அறிக்கைகளைத் தயாரித்தல் மற்றும் அவற்றினைச் சமர்ப்பித்தல் என்பன இப்பிரிவுக்கு வழங்கப்பட்டுள்ள பொறுப்புக்களாகும். மேலும், பதவியினர் போதிய எண்ணிக்கையில் இருப்பதனை உறுதி செய்வதுடன் அவர்கள் தமது பணியினை வினைத்திறனுடனும் பயன்வலுமிக்கதாகவும் நிறைவேற்றுவதற்கு முடியுமான வகையில் பதவியினரின் அறிவு மற்றும் ஆற்றல்களை அதிகரித்தல், நிர்வாக மற்றும் நிதியியல் வழிகாட்டிகளை உருவாக்குதல், பெறுமதிசேர்க்கப்பட்ட பொருட்கள் சேவைகளை கொள்வனவு செய்தல், பதவியினர் தமது பணிகளை சிறப்பாகப் புரிவதற்காக அவர்களது செயலாற்றுகையினையும் பண்புகளையும் வளர்க்கும் வகையிலான பாதுகாப்பான தொழிற்பாட்டு சூழலினை ஏற்பாடு செய்தல் என்பன இப்பிரிவின் பணிகளாகும்.

## கிடைப்பனவிலுள்ள வெளியீடுகள்

* காப்புறுதித் தொழில் (தமிழ்) - காப்புறுதித் தொழில், ஒழுங்குபடுத்தல் மற்றும் சந்தை புள்ளிவிபரங்கள் பற்றிய கண்ணோட்டம். திரு. நிமல் பெரேரா
* காப்புறுதி தொடர்பான கல்விசார் கையேடுகள். (சிங்களம் / தமிழ்)
* ஆயுட்காப்புறுதி மற்றும் பொதுவான காப்புறுதி பற்றிய முக்கிய விடயங்களைக் கொண்ட கையேடு (சிங்களம் / தமிழ்)
* இலங்கை காப்புறுதிச் சபை பற்றிய கையேடுகள் (சிங்களம் / தமிழ் / ஆங்கிலம்)

## முக்கியமான முகவரிகள்

**இலங்கை காப்புறுதிச் சபை**
11ஆம் மாடி, கிழக்கு கோபுரம்
உலக வர்த்தக மையம்
கொழும்பு 01
தொலைபேசி: 0112396184-9
தொலைமடல்: 0112396190-1
மின்னஞ்சல்: info@ibsl.gov.lk
இணையத்தளம்: www.ibsl.gov.lk

**இலங்கை காப்புறுதி அமைப்பு**
தலைவரின் அலுவலகம்
143A, வஜிர வீதி, கொழும்பு 05
தொலைபேசி: 0115635582
தொலைமடல்: 0112585785

**இலங்கை காப்புறுதி தரகர்கள் அமைப்பு**
ஜேய் இன்சுவரன்ஸ் கன்சல்டன்ட்ஸ் (பிரைவட்) லிமிரற்
இல. 252A/1/5
மெதடிஸ்ட் மத்திய கட்டடம்
காலி வீதி, கொழும்பு 03
தொலைபேசி: 0112437959
தொலைமடல்: 0112451934

**இலங்கை காப்புறுதி நிறுவகம்**
1ஆம் மாடி, வை.எம்.சீ.ஏ கட்டடம்
143, சாந்த மைக்கல் வீதி, கொழும்பு 03
தொலைபேசி: 0112432050, 0112431426
தொலைமடல்: 0115337731
மின்னஞ்சல்: slii@sltnet.lk

**காப்புறுதி குறைகேள் அதிகாரி**
143பு, வஜிர வீதி, கொழும்பு 05
தொலைபேசி: 0114528671-05
தொலைமடல்: 0114528670
மின்னஞ்சல்: info@insuranceombudsman.lk
இணையத்தளம்: www.insuranceombudsman.lk

# இலங்கை காப்புறுதிச் சபை



IBSL
INSURANCE
BOARD OF SRI LANKA

காப்புறுதிக் கைத்தொழில் ஒழுங்குபடுத்துனர்
(நிதி திட்டமிடல் அமைச்சின் கீழ் தாபிக்கப்பட்டது)

## இலங்கை காப்புறுதிச் சபை

இலங்கை காப்புறுதிச் சபையானது, காப்புறுதிக் கைத்தொழிலினை விருத்தி செய்தல், மேற்பார்வை செய்தல் மற்றும் ஒழுங்குபடுத்தல் நோக்கத்திற்காக நிதி திட்டமிடல் அமைச்சின் கீழ் 2001 மார்ச் 1ஆம் திகதியிலிருந்து பயன்வலுப் பெறும் வகையில் 2000ஆம் ஆண்டின் 43ஆம் இலக்க காப்புறுதிக் கைத்தொழில் ஒழுங்குபடுத்தல் சட்டத்தின் ஏற்பாடுகளின் நியதிகளுக்கு அமைவாக தாபிக்கப்பட்டது.

## இலங்கை காப்புறுதிச் சபையின் நோக்கமும் பொறுப்பும்

காப்புறுதியாளர்கள் மற்றும் காப்புறுதியளர்களின் அக்கறையினைப் பாதுகாக்கும் நோக்குடன் உயர் தொழில் மற்றும் திறமையான அமைப்பில் இலங்கையில் காப்புறுதித் தொழிலினை மேற்கொள்வதனை உறுதிப்படுத்துவது இலங்கை காப்புறுதிச் சபையின் நோக்கமும் பொறுப்புமாகும்.

## இலங்கை காப்புறுதிச் சபையின் அதிகாரங்களும் தொழிற்பாடுகளும்.

- இலங்கையில் காப்புறுதித் தொழிலினை மேற்கொள்பவர்களை காப்புறுதியாளர்களாகப் பதிவு செய்தல்.
- காப்புறுதித் தரகர்களாக ஆட்களைப் பதிவு செய்தல்.
- நட்ட சரிப்படுத்துநர்களாக ஆட்களைப் பதிவு செய்தல்.
- காப்புறுதித் தொழில் விருத்தி மற்றும் ஒழுங்குபடுத்தல் தொடர்பில் அரசாங்கத்திற்கு ஆலோசனை வழங்கல்.
- காப்புறுதித் தொழில் தொடர்பில் அரசாங்கத்தின் கொள்கைகள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களைச் செயற்படுத்தல்.
- சபையின் பணிகள் கடமைகள் மற்றும் அதிகாரங்களைப் பிரயோகித்தல், நிறைவேற்றல் மற்றும் செயற்படுத்தும் நோக்கத்திற்காக அவசியம் எனப்படும் அலுவலர்கள் மற்றும் ஊழியர்களை தொழிலுக்கமர்த்தல்.
- ஏதேனும் நடமாடும் அல்லது நிலையான ஆதனத்தை கொள்வனவு செய்தல், வைத்திருத்தல் மற்றும் விற்பனை செய்தல், வாடகைக்கு விடுதல், ஈடுவைத்தல் அல்லது அவற்றை விற்பனை செய்தல்.
- சபையின் அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளை நிறைவேற்றல், செயலாற்றுதல் மற்றும் புரிதல் என்பவற்றுக்கு அவசியமான ஒப்பந்தங்களாக இருக்கக்கூடிய அத்தகைய அனைத்து உடன்படிக்கைகளிலும் கைச்சாத்திடுதல்.
- காப்புறுதித் தொழில் ஒழுங்குபடுத்தல் சட்டத்தின் கீழ் சபையின் அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளை நிறைவேற்றல், செயலாற்றுதல் மற்றும் புரிதல் என்பவற்றுக்கு அவசியமான அத்தகைய ஏனைய அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுதல்.

## பிரிவுகளும் பிரதான செயற்பாடுகளும்




### சட்டப் பிரிவு

சட்டப் பிரிவின் பிரதான பணிகளானது, சட்டம் தொடர்பான விடயங்களில் சபைக்கு ஆலோசனை சேவைகளை வழங்குவதாகும். இந்த வகையில், இப்பிரிவானது காப்புறுதித் தொழிலில் அபரிமிதமான வளர்ச்சியொன்றினை உருவாக்கும் நோக்கத்துடன் மேலே குறிப்பிடப்பட்ட காப்புறுதித் தொழில் ஒழுங்குபடுத்தல் சட்டம் மற்றும் துணைச் சட்டவாக்கங்கள் என்பவற்றுக்கு திருத்தங்களைச் செய்தல், காப்புறுதித் தொழில் சட்டத்தின் நியதிகளுக்கமைவாக மேற்கொள்ளப்பட வேண்டிய விதிகள், ஒழுங்குவிதிகள், பணிப்புரைகள், தீர்மானங்கள் என்பவற்றை உருவாக்குகின்றது. மேலும் இப்பிரிவானது, இலங்கையில் காப்புறுதித் தொழில் மற்றும் காப்புறுதி தரகுத் தொழிலில் ஈடுபட்டுள்ள ஆட்களை காப்புறுதியாளர்களாகவும் காப்புறுதி தரகர்களாகவும் பதிவு செய்வதற்கான விண்ணப்பங்களையும் மதிப்பீடு செய்கின்றது. அத்துடன் இப்பிரிவானது, காப்புறுதி மற்றும் தரகு நிறுவனங்களின் பிரதான அலுவலர்கள் மற்றும் காப்புறுதி நிறுவனங்களின் பணிப்பாளர்களை நியமிப்பதற்கான விண்ணப்பங்களையும் மதிப்பீடு செய்கின்றது.

### மேற்பார்வைப் பிரிவு

மேற்பார்வைப் பிரிவின் பிரதான பணிகளாவன, காப்புறுதிக் கம்பனிகள் மற்றும் காப்புறுதித் தரகுக் கம்பனிகளின் வங்குரோத்து நிலை மற்றும் நிதி ஸ்திரத்தன்மை என்பவற்றை உறுதிப்படுத்துவதாகும். இந்த வகையில் இப்பிரிவானது, கம்பனிகளின் உள்ளக மற்றும் வெளிப்புற மேற்பார்வை செயற்பாடுகளை மேற்கொள்கின்றது. புதிய உரிமப் பத்திரங்களுக்கான சிபாரிசுகளை செய்யும் வகையில், வியாபார திட்டங்கள், நிதிச் செயலாற்றுகைகள் மற்றும் புதிய நிறுவனங்களின் எதிர்வுகூறல்களையும் மதிப்பீடு செய்கின்றது. மேலும் இப்பிரிவானது, இலங்கையில் காப்புறுதித் துறைக்கான ஆபத்து உணர்வுக் குறைப்பு மூலதனம் (Risk Sensitive Minimum Capital) என்பதனை மேலும் விருத்தி செய்து செயற்படுத்துவதற்காக தற்பொழுது ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றது. உள்ளூர் மற்றும் சர்வதேச காப்புறுதி சந்தையில் இடம்பெறும் மாற்றங்களுக்கு இடமளிக்கும் வகையில், காப்புறுதித் தொழில் துறை மற்றும் அக்கரை செலுத்துநர்களுடன் இணைந்து இப்பிரிவானது தொடர்ந்தும் செயற்பட்டு வருகின்றது.

### புலனாய்வுப் பிரிவு மற்றும் சந்தை விருத்தி, வெளியுறவுகள் பிரிவு

காப்புறுதிக் கோரிக்கையொன்று தொடர்பில் திருப்திகரமற்ற கொடுப்பனவு அல்லது நடுவர் ஒருவரின் பிறழ்நடத்தை. கையாடல் காரணமாக காப்புறுதியாளரினால் அல்லது பாதிக்கப்பட்டவர்களினால் மேற்கொள்ளப்படும் முறைப்பாடுகளை விசாரணை செய்வதனை புலனாய்வுப் பிரிவு பிரதான பணியாகக் கொண்டுள்ளது. திருத்தப்பட்டவாறான காப்புறுதித் தொழில் ஒழுங்குபடுத்தல் சட்டத்தின் நியதிகளுக்கு அமைவாக, வெளியிடப்பட்ட விதிகள். ஒழுங்குவிதிகளின் படி காப்புறுதி முகவர்களின் தகைமைகள் தொடர்பான முறைப்பாடுகளையும் இப்பிரிவு புலனாய்வு செய்கின்றது. இதற்கு மேலதிகமாக இப்பிரிவானது, திருத்தப்பட்டவாறான காப்புறுதித் தொழில் ஒழுங்குபடுத்தல் சட்டம் மற்றும் அல்லது அதன் மூலம் உருவாக்கப்பட்ட விதிகள் மற்றும். ஒழுங்கு விதிகள் என்பவற்றின் நியதிகளுடன் இணங்கியொழுகாத. முரண்படுகின்றதாக முன்வைக்கப்படுகின்ற ஏதேனும் குற்றச் சாட்டுக்கள் தொடர்பான முறைப்பாடுகளை விசாரணை செய்கின்றது.

புலனாய்வுப் பிரிவுடன் இணைக்கப்பட்டுள்ள சந்தைப்படுத்தல் அபிவிருத்தி மற்றும் வெளியுறவுகள் பிரிவானது, காப்புறுதித் தொழில் துறையினை அபிவிருத்தி செய்வதற்கு வசதியளிக்கும் வகையில் காப்புறுதி தொடர்பான விடயங்களை அறிவூட்டுவதற்கும் அது தொடர்பான விளக்கங்களை வழங்குவதற்கும் பல்வேறுபட்ட விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துகின்றது. மேலும் இப்பிரிவானது, காப்புறுதி தொடர்பான உள்ளக வெளியீடுகளை தயாரிப்பதுடன் ஊடகப் பிரசாரத்தினையும் மேற்கொள்கின்றது.